பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,

காரைக்கால் & இந்திய வானிலைத்துறை


## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(07.05.2025 முதல் 11.05.2025 வரை)


தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182

E-mail: agronaas2012@gmail.comதொ. நகல் (அலுவலகம்): 04368-261260


அறிக்கை எண்: 036 (05) PJN/GKMS/2025 தேதி: 06.05.2025

### காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (01.05.2025 முதல் 05.05.2025 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -11.05.2025 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **01/05** | **02/05** | **03/05** | **04/05** | **05/05** | | நாள்-1 07/05 | நாள்-2 08/05 | நாள்-3 09/05 | நாள்-4 10/05 | நாள்-5 11/05 |
| 0 | 0 | 0 | 0 | 12.0 | மழை (மி.மீ) | 8 | 6 | 8 | 14 | 16 |
| 37 | 37 | 38 | 38 | 38 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 33 | 32 | 32 | 31 | 30 |
| 27 | 27 | 27 | 27 | 23 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 27 | 26 | 25 | 25 | 24 |
| 4 | 3 | 2 | 3 | 3 | மேக மூட்டம் | 8 | 8 | 8 | 8 | 3 |
| 59-86 | 73-88 | 59-89 | 59-89 | 72-84 | ஈரப்பதம் (%) | 50-70 | 40-70 | 50-70 | 40-70 | 40-70 |
| 3 | 4 | 3 | 4 | 6 | காற்றின் வேகம் (கி.மீ) | 26 | 24 | 20 | 18 | 14 |
| தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | கிழக்கு தென் மேற்கு | கிழக்கு தென் கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (07.05.2025 முதல் 11.05.2025 வரை):**

மே 07 லிருந்து 10வரை லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

மே 11 ஆம் தேதி மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த சில நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்பநிலை 24-33 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 40-70 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 14-26 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

மே 11 லிருந்து 17 வரை மழை (2.9 மி.மீ) இயல்பை விட அதிகமாகவும், அதிகபட்ச வெப்பநிலை (35.4 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (25.1டி.செ) இயல்பாகவும் இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுரை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| பொது அறிவுரை | சில இடங்களில் இடியுடன் கூடிய மழை மற்றும் மின்னல் எதிர்பார்க்கப்படுகிறது. பயிர்களில் பயிர்கழிவு மூடாக்கு இடுவதனால் மழையினால் கிடைத்த மண் ஈரத்தினை ஆவியாகமல் சேமிக்கலாம். | |
| பருத்தி | பயிர் வளர்ச்சி பருவம் | காரைக்கால் மாவட்டம் பகுதிகளில் கடந்த சில தினங்களாக நிலவிய வானிலையானது பருத்தியில் சாறு உருஞ்சும் பூச்சிகளான இலைப்பேன் மற்றும் அசுவினி பூச்சுகளினால் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, இப்பூச்சிகளின் தாக்குதல் தென்பட்டால் சாறு உருஞ்சும் பூச்சிகளை கட்டுபடுத்த ஹெக்டருக்கு இமிடாக்லோபிரைட் |

| | | |
|---|---|---|
| | | 17.8 SL 100 மி.லி. அல்லது அசாடிராக்டின் 0.03% (300 ppm) 2500 மிலி தெளிக்கவும். |
| | | பருத்தியில் இரகங்களுக்கு 15 வது கனுவிலும், ஒட்டு செடிகளுக்கு 20 வது கனுவிலும் நுனி கிள்ளுவதன் மூலம் மகசூலை அதிகரிக்கலாம் |
| வாழை | | முட்டுக்கொடுத்தல்/கால்வாய் அமைத்தல்: மூங்கில் கம்புகள் அல்லது கயிறுகளை முக்கோணத்தில் பயன்படுத்தி பயிர்கள் சாய்வதைத் தடுக்கவும்.<br>வடிகால் வசதியை மேம்படுத்தவும்.<br>நீர்ப்பாசனம் மற்றும் உரங்களை மழைக்கு சற்று முன்பு பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். |
| தென்னை | | தென்னை தோட்டங்களைச் சுற்றியுள்ள வடிகால் வழிகளை சுத்தம் செய்து வேர் மண்டலத்திற்கு அருகில் நீர் தேங்குவதைத் தவிர்க்கவும்.<br>காற்றினால் ஏற்படும் சேதத்தைக் குறைக்க உலர்ந்த அல்லது பலவீனமான இலைகள் மற்றும் சேதமடைந்த தேங்காய்களை அகற்றவும்.<br>ஊட்டச்சத்து இழப்பைத் தடுக்க எதிர்பார்க்கப்படும் மழைக்கு சற்று முன்பு உரமிடுவதைத் தவிர்க்கவும். |
| கால்நடை | | கனமழை பெய்யும் போது கால்நடைகளை நன்கு காற்றோட்டமான, உயர்த்தப்பட்ட தங்குமிடங்களுக்கு மாற்றவும்.<br>இடியுடன் கூடிய மழை பெய்யும் போது மரங்களுக்கு அடியில் அல்லது திறந்தவெளிகளில் விலங்குகளை கட்டுவதைத் தவிர்க்கவும்.<br>கொட்டகைகளில் கூரை, சுவர்கள் மற்றும் வடிகால் ஆகியவை நல்ல நிலையில் இருப்பதையும், மழையைத் தாங்கும் தன்மையையும் உறுதி செய்யவும். |

**குறுஞ்செய்தி:** அடுத்த சில நாட்களுக்கு லேசான முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

**முதல்வர்**